# “த.்.வா பணிக்காக சமூகவலைத்தளங்களை பயன்படுத்துவதில் ஆலிம்களின் நிலைப்பாடு” (இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபுமொழிப்பீடத்தை மையப்படுத்திய ஆய்வு)

**MS. Zunoomy [(1)], FHA.Shibly [(2)], MAA. Asrin[(3)]**

[(1),(2) &(3)] Department of Arabic Language, Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka.

shiblymis@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

அகிலத்தாருக்கு அருட்கொடையாக அனுப்பப்பட்ட இறுதி இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் தங்களின் த.்.வா ஊடகமாக ஜபலுன்னூர் எனும் மலையை தெரிவுசெய்து தனது முதல் அழைப்பை (த.்.வாவை) ஆரம்பித்தார்கள். இன்று தொழில் நுட்பம் வளர்ச்சியடைந்து இருக்கும் இக்கால கட்டத்தில் த.்.வாப்பணியை நிறைவேற்ற அனைத்து முஸ்லிம்களும் பொறுப்புடையவர்களாவர். இவர்களுள் த.்.வா பணிக்கென்றே பயிற்றுவிக்கப்படும் ஆலிம்கள்[1] பல்வேறு வகைகளிலும் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றனர். இத்தருணத்தில் அண்மைய வருடங்களாக அதிகம் உபயோகிக்கப்பட்டு வரும் சமூகவலைத்தளங்களை த.்.வா பணிக்காக அவர்கள் பயன்படுத்துவதிலுள்ள கவனயீனம் காரணமாக த.்.வா பணியில் இடைவெளி ஏற்படும் நிலைமை உருவாகியுள்ளது. அதாவது த.்.வா பணிக்காக சமூகவலைத்தளங்களை பயன்படுத்தும் ஆலிம்கள் அவற்றில் செலவிடும் கால அளவு குறிப்பிட்டு சொல்லத்தக்க வகையில் இல்லாதிருப்பதை அவதானிக்க முடிகின்றது. இதனடியாக, இவ்வாய்வானது இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடத்தை சேர்ந்த இருநூறு மாணவர்களை பரீட்சிக்கின்றது. ஆலிம்கள் த.்.வா பணிக்கு சமூக வலைத்தளங்களை பயன்படுத்தும் கால அளவை அறியப்படுத்தல், த.்.வா பணிக்கு அவற்றின் முக்கியத்துவத்தை உணர்த்தல், அவற்றை த.்.வா பணிக்கு சிறந்த முறையில் பயன்படுத்த வழிகாட்டல் வழங்குதல் ஆகிய மூன்று தலையாய நோக்கங்களை கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாய்வில் முதலாம் நிலைத்தரவுகள் வினாக்கொத்து, கலந்துரையாடல், அவதானம் மூலம் பெறப்பட்டுள்ளன. பெறப்பட்ட தரவுகள் அனைத்தும் எம்.எஸ். எக்ஸல் (MS Excel) மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. ஆலிம்கள் காலத்திற்கு ஏற்றாற் போல் சமூகவலைத்தளங்களை பயன்படுத்தி த.்.வா செய்ய வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டிருந்தாலும், அதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்வதை விட்டும், போதுமான நேரங்களை ஒதுக்குவதை விட்டும் கவனயீனமாக இருக்கின்றனர். என்பதை இவ்வாய்வின் முடிவாக எடுத்துக்கொள்ளலாம். இறுதியாக, த.்.வாப்பணி செய்ய சமூகவலைத்தளங்களை சிறந்த முறையில் பயன்படுத்த வழிகாட்டல் வழங்கப்படுவதால் இவ்வாய்வு காலத்தின் தேவையை உணர்ந்து மேற்கொள்ளப்பட்டுள்ளதை நிரூபிக்கின்றது. இதனடிப்படையில் இவ்வாய்வு மூலம் ஆலிம்கள் சிறந்த வழிகாட்டல்களை பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**திறவுச் சொற்கள் :** த.்.வா, சமூக வலைத்தளங்கள், ஆலிம்கள்

## அறிமுகம்:

[1] மத்ரஸாக்களில் பல வருடங்கள் இஸ்லாமிய சட்டங்களை, வரையறைகளை கற்பவர்கள். இவர்கள் அனைவரும் மத்ரஸா பட்டம் பெற்று வெளியாகிய பின்னர் ‘‘ஆலிம்’’ என அடையாளப்படுத்தப்படுகின்றனர்.

த.ஃவாப்பணி என்பது அல்லாஹ்வின் பாலும், அவனின் மார்க்கத்தின் பாலும் மக்களை அழைப்பதாகும். இதில் அசத்தியங்களை விட்டுவிடும் படியும், சத்தியங்களை ஏற்றக்கொள்ளும்படியும் ஒரு தாயீ (அழைப்பாளன்) ஏவுவார். மக்களை நேர்வழிப்படுத்த இவ்வுலகிற்கு அல்லாஹ்வினால் அனுப்பப்பட்ட அனைத்து நபிமார்களும், ரஸூல்மார்களும் சத்தியத்தை (ஓரிறைக்கொள்கையை) போதிப்பதையே தலையாய நோக்கமாக கொண்டிருந்தனர்.

த.ஃவா எனும் அறபுச்சொல்லுக்கு தமிழ்மொழியில் ''அழைத்தல், எத்திவைத்தல்'' ஆகிய கருத்துக்களில் பயன்படுத்தப்படுகின்றது. இச்சொல் பரிபாஷையில் '' அல்லாஹ்வின் பால் இஸ்லாமிய நெறிமுறைகளை கொண்டு மக்களை அழைக்கும் பணி'' எனப்படுகின்றது. (அப்துர்ரஹ்மான் அர்ராவி, 1965) பொதுவாக த.ஃவா என்பது மாற்று மதத்தவர்களை இஸ்லாத்தின் பால் அழைத்தல் எனும் பொருளிலேயே பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது. எனினும் சிறுபான்மை முஸ்லிம்களை கொண்ட இலங்கைத்திருநாட்டில் த.ஃவா ஆனது முஸ்லிம்களை நல்லம்சங்களில் பால் வழிநடாத்துகின்ற சீர்திருத்தப்பணி (இஸ்லாஹ்) என பொருள்கொள்ளப்படுகின்றது. இந்தவகையில் இஸ்லாத்தின் பால் மாற்றுமதத்தவர்களை அழைத்தல், இஸ்லாமியர்களை இஸ்லாமிய போதனைகளின் பால் வழிகாட்டி சீர்திருத்தம் செய்தல் ஆகிய இரு பிரதான கருத்துக்களை த.ஃவா எனும் பதம் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

த.ஃவாப்பணியின் சிறப்பைப் பற்றி நபி(ஸல்) அவர்கள் குறிப்பிடும் போது ''உங்களின் மூலம் ஒருவர் நேர்வழி (ஹிதாயத்) பெறுவதானது, உங்களுக்கு சிவப்பு ஒட்டகங்களை விட சிறந்தது'' என்றார்கள். (புஹாரி 3498) அன்று வாழ்ந்த அறேபியர்களின் மிக உயர்ந்த செல்வமாக சிவப்பு ஒட்டகம் கருதப்பட்டதால் நபி(ஸல்) அவர்கள் அதற்கு ஒப்பிட்டார்கள். இன்று எம்மால் மிக பெறுமதியாக கருதப்படும் செல்வத்திற்கு நிகராகவே ஒருவருக்கு எம்மூலம் நேர்வழி கிடைக்கப்பெறும் சிறப்பு உள்ளது.

ஆனால், இன்றைய நவீன காலத்தின் மேற்குலக சக்திகளாலும், அந்நிய மதங்களாலும், நவநாகரீக கலாச்சாரங்களினாலும் இஸ்லாத்தை நிலைநிறுத்துவது சவாலாக மாறிவருகின்றது. (மௌலானா அமீன் அஹ்ஸன், 2012) மாறாக இஸ்லாத்தில் தடைசெய்யப்பட்ட ஹராமான, ஷைத்தானிய செயல்களின் பக்கம் மக்களை கவர்ந்திழுக்க கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்யப்படுகின்றன. இதற்காக பல வகையான தொலைத்தொடர்பு சாதனங்களும் அழைக்கின்றன. ஆபாசத்தையும், கவர்ச்சியையும், வன்முறையையும், கேளிக்கையையும் மட்டுமே மூலதனமாக கொண்ட இன்றைய சினிமாக்கள் சமூகத்தை சீரழிவின் பால் மக்களை அழைப்புவிடுக்கின்றது. இவ்வாறாக தீமைக்கான அழைப்பு உலகெங்கிலும் நடந்துகொண்டிருக்கின்றது. இவ்வளவு பரவலாக தீமைக்கான அழைப்பு நடைபெறும் பொழுது மக்களை நன்மையின்பால் அழைக்கும் பணி மாத்திரம் உயிரோட்டமிழந்து காணப்படுகின்றது. தீமையின் பக்கம் மக்கள் இழுபட்டுச்செல்லும் வேகத்தையும், அதற்காக செய்யப்படும் முயற்சிகளையும் பார்க்கும் போது நன்மையின்பால் அழைத்து தீமைக்கு எதிராக குரல் கொடுப்பது எவ்வளவு அவசியம் என்பதை விளங்க முடிகின்றது. (ஆய்வுக்கட்டுரை (2017), நான்காவது ஆய்வு மாநாடு, தென்கிழக்குப்பல்கலைக்கழகம், Paper ID: IC26)

இந்தளவிற்கு த.ஃவாவின் முக்கியத்துவம் மேலோங்கி இருக்கின்ற இக்கால கட்டத்தில் நவீன தொலைத்தொடர்பு சாதனங்களை த.ஃவா பணிக்காக பயன்படுத்தாமல் இருப்பதென்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயமல்ல. சமூகவலைத்தளங்களில் பிழையான விடயங்களுக்கான கதவுகள் திறக்கப்பட்டுள்ளது போல் நல்லவற்றுக்கான கதவுகளும் உண்டு. இங்குள்ள பிழையான கதவுகளை மூடிவிடவும், நல்லவற்றுக்கான கதவுகளை திறந்துவிடவும் கட்டாயம் சமூகவலைத்தளங்களின் ஊடாக

த.்.வாப்பணி இடம்பெற்றே ஆக வேண்டும். இல்லாதவிடத்து முழு சமூகவலைத்தளங்களும் தவறுகளால், பிழைகளால் நிரம்பிவிடும் நிலை உருவாகும். இத்தோரணையில் இவ்வாய்வானது த.்.வாப்பணியை மேற்கொள்ள சமூகவலைத்தளங்களை பயன்படுத்த ஆலிம்களை ஆர்வமூட்டுகின்ற, வழிகாட்டுகின்ற பணியை செய்ய எத்தணிக்கின்றது. அடுத்து, சமகால த.்.வா முறை குறித்து பேசுவது இவ்வாய்வு முக்கியத்துவம் பெற காரணமாகின்றது.

**ஆய்வுப்பிரச்சினை :**

நவீன காலத்திற்கேற்ப த.்.வா பணியை மேற்கொள்ள சமூக வலைத்தளங்கள் உதவியாக அமைகின்ற போதிலும், அவற்றை பயன்படுத்தும் தாயீக்கள் (அழைப்பாளர்கள்) த.்.வா பணி செய்ய இதனை முழுமையாக பயன்படுத்தாத நிலைமையை காணமுடிகின்றது. எனினும் இவர்கள் அதிகளவு நேரத்தை இவற்றை பயன்படுத்துவதில் கழிக்கின்றனர். இந்தவகையில் இவ்வாய்வானது சமூக வலைத்தளங்களை த.்.வாவிற்கு சரியான முறையில் பயன்படுத்துவதற்கு வழிகாட்ட முனைகின்றது.

**ஆய்வு நோக்கங்கள் :**

1. த.்.வா பணிக்கு சமூக வலைத்தளங்கள் பயன்படுத்தப்படும் கால அளவை அறியப்படுத்தல்
2. த.்.வா பணிக்கு சமூக வலைத்தளங்களின் முக்கியத்துவத்தை உணர்த்தல்
3. சமூக வலைத்தளங்களை த.்.வாப் பணிக்கு பிரயோசனமான முறையில் பயன்படுத்துவதற்கு வழிகாட்டல் வழங்குதல்

**ஆய்வுப்பிரதேசம் :**

த.்.வா பணியை மேற்கொள்ள அறபு மத்ரஸாக்களில் பயிற்றுவிக்கப்பட்ட ஆண், பெண் ஆலிம்களை உட்பொதிந்து இருக்கின்ற இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபுமொழிப்பீடத்தை சேர்ந்த 200 மாணவர்களை மாதிரிகளாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வு முறையியல் :**

இவ்வாய்வானது முதற்தர, இரண்டாம் தர தரவுகளை உள்ளடக்கி, தரம்சார், பண்புசார் ஒப்பீட்டு ஆய்வு முறைமையினைப் உட்பொதிந்து இருக்கின்றது. இதில் முதலாம் நிலைத் தரவுகள் வினாக்கொத்து, கலந்துரையாடல், அவதானம் மூலம் பெறப்பட்டன.

இரண்டாம் நிலைத் தரவுகள் நூற்கள், ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள் மூலம் பெறப்பட்டன.
இந்த ஆய்விற்காக ஆய்வுப் பிரதேசத்தில் இருந்து சுமார் 200 மாணவர்கள் மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இவ்வாய்விற்காக வழங்கப்பட்ட வினாக்கொத்து, பயன்படுத்தும் சமூகவலைத்தளங்கள், ஒருநாளில் பயன்படுத்தும் காலஅளவு, த.்.வாவிற்காக அவற்றை பயன்படுத்தும் கால அளவு, சமூக வலைத்தளங்களை பயன்படுத்துவது தொடர்பான விடயங்கள் உள்ளடங்கலாக 25 வினாக்களை உள்ளடக்கியுள்ளது. ஆய்வுத்தரவுகளை உறுதிப்படுத்தும் முகமாக பூரண அவதானிப்பு இடம்பெற்றுள்ளதுடன், நம்பகமான நபர்களிடமிருந்து நேர்காணல் மூலம் சமூக வலைத்தளங்களின் யதார்த்தமான பாவனை முறை பற்றியும் தகவல்கள் பெறப்பட்டுள்ளன.

**இலக்கிய மீளாய்வு :**

இவ்வாய்வுத் தலைப்பானது சமூகவலைத்தளங்களை மையப்படுத்திய த.்.வாப்பணி பற்றி பேசும் அதேவேளை முன்னைய ஆய்வுகளும் கட்டுரைகளும் த.்.வாவின் முக்கியத்துவம், அதன் அவசியம், தாயீக்களின் பண்புகள் போன்ற தலைப்புக்களை பேசுகின்றன.

மௌலவி முஹம்மது நூஹ் அல்தாபி (ஏப்ரல் 28, 2013) ஆய்வுசெய்ய ''த.்.வா களமும், த.்.வா களத்தில் தவிர்க்க வேண்டிய அம்சங்களும்'' என்ற தலைப்பானது மாற்றுமத சகோதரர்களுக்கு த.்.வா செய்யும் போது கடைப்பிடிக்க வேண்டிய அம்சங்கள் பற்றி தெளிவுபடுத்தியிருந்தார்கள்.

டயசியா பு. (2017) இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக ஏழாவது சர்வதேச ஆய்வு மாநாட்டிற்கு ''தற்காலத்தில் பாடசாலை மாணவர்களிடம் காணப்படும் சமூக ஊடகங்களின் பாவனையும் அவற்றின் விளைவுகளும் - கல்லடி பிரதேசத்தை மையமாக கொண்ட சமூகவியல் ஆய்வு'' எனும் தலைப்பில் ஆய்வொன்றை சமர்ப்பித்திருந்தார். இதில் சமூகவலைத்தளங்கள் மூலம் மாணவர்களுக்கு எவ்வாறான உடல், உள, சமூகப்பாதிப்புக்கள் ஏற்படுகின்றன என அறிதல், மாணவர்கள் மத்தியில் அவற்றின் பாவனையின் வீதத்தை அறிதல் மற்றும் பெற்றோர், ஆசிரியர்களின் சமூக ஊடகங்கள் மீதான பார்வையை அறிதல் போன்றன ஆய்வின் நோக்கங்களாக கொண்டு இவ்வாய்வு செய்யப்பட்டுள்ளது.

இமாம், எம்.எப்.எம். (2013) என்பவர் கலாநிதி. எஸ்.எம்.எம். நபீஸ் அவர்களின் மேற்பார்வையில் ''சமூக வலைத்தளங்கள் முஸ்லிம் இளைஞர்கள் மத்தியில் ஏற்படுத்திவரும் எதிர்மறையான தாக்கங்கள்: நிந்தவூர் பிரதேசத்தை மையப்படுத்தியதோர் ஆய்வு'' எனும் ஆய்வொன்றை செய்துள்ளார். இவ்வாய்வின் முடிவாக சமூகவலைத்தளங்கள் முஸ்லிம் இளைஞர்கள் மத்தியில் எதிர்மறையான தாக்கங்களை அதிகம் ஏற்படுத்தி வருகின்றன. அவை இளைஞர்களின் கல்வி, கலாசார, சமய, சமூக, பொருளாதாரம் போன்றவற்றில் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.

மௌலவி ஹாமித் லெப்பை மஹ்மூத் ஆலிம் (2008) எழுதிய த.்.வா – அழைப்புபணியின் வரைவிலக்கணம் எனும் இணையக்கட்டுரையில் அழைப்புப்பணியின் சட்டம், அவசியம், நோக்கம், அடிப்படைகள், தூண்கள் மற்றும் அழைப்பாளர்களின் பண்புகள் போன்ற தலைப்புக்களை அல்குர்ஆன், அஸ்ஸுன்னா நிழலில் விளக்கியிருந்தார்கள்.

அஷ்ஷெய்க் அகார் முஹம்மத் ஏ.சி. (ஜுலை 31, 2015) எழுதிய ''இலங்கை முஸ்லிம்களுக்காக த.்.வாவின் தேவைப்பாடும், இன்றைய கால் த.்.வாவில் முன்னுரிமை பெற வேண்டிய அம்சங்களும்'' எனும் கட்டுரையில் இலங்கைவாழ் சிறுபான்மை முஸ்லிம்களை மையப்படுத்தியிருந்தது.


மௌலவி இஸ்மாயில் எஸ்.எச்.எம். (ஸலபி) (செப்டம்பர் 04, 2010) வரைந்த ''அழைப்புப்பணியின் அவசியம்'' கட்டுரையில் த.்.வாவில் முஸ்லிம்களின் பங்களிப்பு, எவ்வாறு அழைப்புப்பணியை மேற்கொள்வது, அழைப்புப்பணியின் நன்மைகள் பற்றி விளக்கியிருந்தார்கள்.

**பெறுபேறுகளும், கலந்துரையாடல்களும் :**

இவ்வாய்வின் நோக்கமான த.்.வா பணிக்கு சமூக வலைத்தளங்கள் பயன்படுத்தப்படும் கால அளவை அறியப்படுத்தல் தொடர்பாக.

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபுமொழிப்பீட மாணவர்கள் அனைவரும் ஆலிம்களாக உள்ளனர். இவர்களுள் ஆண் ஆலிம்களும், பெண் ஆலிமாக்களும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் பெரும்பாலும் தங்கள் ஸ்மார்ட் போன் மூலம் சமூகவலைத்தளங்களை பயன்படுத்துவதாக தெரிவித்தனர். இவ்வாறு சமூக வலைத்தளங்களை பயன்படுத்தும் ஆலிம்கள்

அவற்றை பயன்படுத்துவதன் மூலம் மகிழ்ச்சியடைகின்றார்களா? என்பதை அறிய அளிக்கப்பட்ட வினாவிற்கு வரைபு (1) பதிலாக அமைந்தது.




வரைபு (1)

மகிழ்ச்சியடைகின்றவர்கள் என அடையாளம் காணப்பட்ட சிலரிடம் மகிழ்ச்சிக்கான காரணம் பற்றி வினவிய போது


- சமூகவலைத்தளங்களில் நல்லதும் உள்ளது, கெட்டதும் உள்ளது எமது அறிவை பயன்படுத்தி நல்லதை தெரிவுசெய்வது போதுமானது.
- காலத்திற்கேற்ப தொடர்பாடல் முறைகளை மாற்றுவதன் மூலம் சிறந்த தொடர்புகளை பேணிக்கொள்ள முடியும்.
- அதிக நேரம் இவற்றில் செலவழித்தாலும் சிறிதுநேரம் நல்ல விடயங்களை பார்க்க, பகிர வாய்ப்பு கிடைக்கின்றது.

மறுபுறம் மகிழ்ச்சியின்மை எனக்கூறியவர்களிடம் வினவிய போது

- நேரம் அதிகமாக வீணடிக்கப்படுகின்றது.
- பிழையான தொடர்புகள் ஏற்படுகின்றன.
- பொய்யான கருத்துக்களை, பிரச்சாரங்களை நம்ப வேண்டி ஏற்படல்.
- த∴வா செய்ய சிறிதுநேரமே ஒதுக்க முடியுமாக இருக்கின்றது.

இவ்விரு சாராரும் தங்களின் மேற்படி கருத்துக்களை கூறியிருந்தாலும் இரு சாராரும் சிறிது நேரமேனும் த∴வா செய்ய நேரம் ஒதுக்கியிருப்பது கவனிக்கத்தக்க விடயமாகும்.


அடுத்து, சமூகவலைத்தளங்களில் அதிக நேரத்தை செலவிட விரும்புபவர்கள் பற்றி வரைபு (2) விபரிக்கின்றது.





வரைபு (2)

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அதிக நேரத்தை சமூகவலைத்தளங்களில் செலவிட விரும்புபவர்களுக்கும், வரைபு (1) இல் கூறப்பட்ட சமூகவலைத்தளங்களை பயன்படுத்துவதில் மகிழ்ச்சியடைதல் பற்றிய தரவுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருப்பதை அவதானிக்க வினாக்கொத்தின் மூலம் அறிய முடிகின்றது. அதாவது வரைபு (2) இல் சமூகவலைத்தளங்களை பயன்படுத்துவதை மகிழ்ச்சியாக கருதுபவர்கள் வரைபு (3) இன் படி அவற்றில் அதிக நேரத்தை செலவிடுவதை முழுமையாக உடன்படுபவர்களாகவும், ஓரளவு உடன்படுபவர்களாகவும் உள்ளனர். அதேபோல் சமூகவலைத்தளங்களை பயன்படுத்துவதில் மகிழ்ச்சியின்மையை வெளிப்படுத்துவோர் அவற்றில் அதிக நேரத்தை செலவிட விரும்புவதில் உடன்பாடின்மையையும், முழுமையாக உடன்பாடின்மையையும் வெளிப்படுத்துகின்றனர்.

சமூகவலைத்தளங்களை பயன்படுத்தும் ஆலிம்கள் ஒருநாளில் அவற்றில் செலவு செய்யும் நேர அளவையும், ஒருநாளில் த.்.வா பணிக்காக செலவு செய்யும் நேர அளவையும் வரைபு (3) மற்றும் வரைபு (4) ஆகியவற்றை ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் விளங்கிக்கொள்ளலாம்.





வரைபு (3)





வரைபு (4)

வரைபு (3) ஆனது 15-120 நிமிடங்கள் வரை அதிகமான ஆலிம்கள் இவற்றில் நேரம் கழிக்கின்ற அதேவேளை 120-150 நிமிடங்கள் மாத்திரம் 1/5 வீதமானோர் நேரம் கழிக்கின்றனர் என சொல்லுகின்றது. மறுபுறம் வரைபு (4) த.்.வாவிற்காக பயன்படுத்தும் நேரஅளவை நோக்குகையில் 1-15 நிமிடங்கள் மிக அதிகமானோர் த.்.வா செய்ய நேரம் ஒதுக்குவதாக அறியமுடிகின்றது. மேலும் 15-60 நிமிடங்கள் 1/5 வீதமானோர் த.்.வா பணிக்காக செலவழிக்கின்றனர். 60 நிமிடங்களுக்கு மேல் யாரும் அவற்றை பயன்படுத்தவில்லை எனின் சராசரியாக ஒரு ஆலிம் சமூகவலைத்தளங்களை பயன்படுத்தும் நேரத்தில் ¼ வீதமே த.்.வாப்பணிக்கு உபயோகப்படுத்துகின்றார். மீதி ¾ பகுதியை அரட்டையடிப்பதிலும், ஸ்டேடஸ்களை(status) பார்ப்பதிலும், தரவிறக்கம் செய்வதிலும் பயன்படுத்துகின்றார். இவ்வாறு குறுகிய நேரத்தில் செய்யப்படும். த.்.வா பணியானது தாக்க பூர்வமானதாக இருப்பது அரிதான விடயமாகும். ஏனெனில் இவர்கள் சமூகவலைத்தளங்களை பயன்படுத்த ஒன்லைன் செல்லுகையில், முதலில் தங்களுக்கு வந்திருக்கும் message, video, photo போன்றவற்றை பார்க்கவே உள்ளுணர்வு சொல்லும், அவ்வாறே நேரத்தை இவற்றை பார்ப்பதில் செலவு செய்துவிடுகின்றனர். பின்னர் ஞாபகம் வரும் பட்சத்தில் ஓரிரு இஸ்லாமிய கருத்துக்களை பதிவேற்றம் செய்கின்றனர். இன்னும் சிலர் களைப்பில் ஓப் (off) செய்துவிட்டு சென்றுவிடுகின்றனர். இத்தகவல்கள் அனைத்தும் பூரண அவதானிப்பு மற்றும் கலந்துரையாடல்கள் மூலம் பெறப்பட்டன.

இவ்வாய்வின் பிறிதொரு நோக்கமான த.்.வா பணிக்கு சமூகவலைத்தளங்களின் முக்கியத்துவத்தை உணர்த்தல் தொடர்பாக பகுப்பாய்வு செய்ய ''சமூகவலைத்தளங்கள் த.்.வா செய்ய மிக ஏற்றமானது'' ''இன்றைய நவீனத்திற்கேற்ப த.்.வாப்பணிக்கு சமூக வலைத்தளங்கள் அத்தியவசியமானவை'' ஆகிய இரு வினாக்கள் தொடுக்கப்பட்டன. இதற்கான பெறுபேறுகள் வரைபு (5) மற்றும் வரைபு (6) மூலம் காட்டப்படுகின்றது.





வரைபு (5)





வரைபு (6)

இவ்விரு வரைபுகளையும் அவதானிக்கும் போது த:.வாப்பணிக்கு சமூகவலைத்தளங்கள் ஏற்றமானது, அத்தியவசியமானது என்பன பெரும்பாலான ஆலிம்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. எனினும், த:.வாவை முன்னெடுக்கும் ஆரம்ப கட்ட முன்னெடுப்புக்களிலுள்ள இஸ்லாமிய நெறிமுறைகளை வழங்குவதிலும், மாற்றுமதத்தவர்களுடன் தொடர்பை பேணுவதிலும் பின்தங்கிய நிலை காணப்படுவதை வரைபு (7) மற்றும் வரைபு (8) எடுத்தியம்புகின்றன.




வரைபு (7)




வரைபு (8)

ஆக, சமூகவலைத்தளங்களை தஃவாப்பணிக்கு அவசியம் என ஏற்றுக்கொள்ளும் ஆலிம்கள் அவற்றுக்கான மேற்கூறப்பட்ட ஆரம்ப கட்ட முன்னெடுப்புக்களிலும் கவனயீனமாக இருக்கின்றனர். மேலும் தஃவாவிற்கு உதவி புரியும் இன்னபிற விடயங்கள்[2] பற்றி கலந்துரையாடிய போதிலும் அவையும் மந்தநிலையிலேயே காணப்படுகின்றன.

ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களுக்கு சமூகவலைத்தளங்கள் மூலம் தஃவாப்பணியை செய்யமுடியும் என புரிந்துவைத்திருந்தாலும் திருப்திகரமான அளவு இவர்களால் தஃவா செய்ய முடியாமல் இருப்பதை அவதானிக்க முடிகின்றது. உண்மையில், இவர்களில் அதிகமானோருக்கு தஃவா செய்ய வேண்டுமென்ற ஆர்வம், ஆசை இருப்பினும் மனோஇச்சைகளை, உள்ளுணர்வுகளை கட்டுப்படுத்த முடியாமல் தஃவா விடயத்தில் கவனயீனமாக செயற்பட்டு ஏனைய விடயங்களில் நேரத்தை செலவழித்து வருகின்றனர்.

**முடிவுரை:**

தஃவாப்பணியை செய்ய பயிற்றுவிக்கப்படும் ஆலிம்கள் காலத்திற்கு ஏற்றாற்போல் சமூகவலைத்தளங்களை பயன்படுத்தி தஃவா செய்ய வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டிருந்தாலும், அதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்ளவதை விட்டும், போதுமான நேரங்களை ஒதுக்குவதை விட்டும் கவனயீனமாக இருக்கின்றனர். மேலும் ஆய்வுப்பிரச்சினையை தீர்ப்பதற்கான வழிகாட்டல்களும், பரிந்துரைகளும் முன்வைக்கப்படுகின்றன.

**வழிகாட்டல்களும், பரிந்துரைகளும்:**

- சமூகத்தில் முன்மாதிரியாக செயற்பட வேண்டியவர்கள் ஆலிம்கள் என்றவகையில் சமூகவலைத்தள பாவனையில் பேணுதலை கடைப்பிடிப்பதுடன், ஏனைய ஆலிம்களையும் ஆர்வமூட்டுதல்.
- சமூகவலைத்தளங்களில் இடம்பெறும் தவறுகளை, பிழைகளை குறைக்க, அவற்றை பயன்படுத்தும் போதே முடியுமாக இருக்கும் என்பதை ஆலிம்கள் ஆழ்மனதில் பதியவைக்க வேண்டும்.

[2] மார்க்க நிகழ்ச்சிகளை நடாத்துதல், தஃவா அமைப்புக்களுடன் சிறந்த தொடர்பை பேணுதல், இஸ்லாமிய புத்தகங்களை வாசித்தல், ஒழுக்கவிடயங்களில் பேணுதலாக நடத்தல் போன்றன.

- காலத்திற்கேற்றாற்போல் த.்.வாவை செய்யவேண்டுமென்ற தார்மீக உணர்வை விதைப்பதில் கல்விக்கூடங்கள்[3] பங்களிப்பு செய்ய வேண்டும்.
- சமூகவலைத்தளங்களினூடாக த.்.வா செய்தல் எனும் கருப்பொருளில் பயிற்சிப்பட்டறைகள், தர்பிய்யா நிகழ்ச்சிகள், அமர்வுகள் நடாத்தப்பட வேண்டும்.
- சமூகவலைத்தளங்கள், அதன் பயன்பாடுகள் குறித்து அனைத்து மட்டத்திலும் விழிப்புணர்வு செய்யப்படல் வேண்டும்.
- த.்.வாவிற்காக சமூகவலைத்தளங்களை எவ்வாறு பயன்படுத்தவேண்டும் என்பதை கருத்தரங்குகள், காணொளிகள், குறுந்திரைப்படங்கள் போன்றவற்றின் மூலம் தெளிவுபடுத்தல் வேண்டும்.
- த.்.வா அமைப்புக்கள் சமூகவலைத்தளங்களை அழைப்புப்பணிக்கு பயன்படுத்துவதில் அக்கறை காட்டுவதுடன், சிறப்பாக பயன்படுத்த வழிகாட்டல் வழங்குதல் வேண்டும்.
- புதிய தலைமுறையினருக்கு ஏற்றாற்போல் த.்.வா செய்ய சமூகவலைத்தளங்களை பயன்படுத்தல் அவசியம் என்பது பற்றிய கட்டுரைகள், ஆய்வுகள் எழுதப்பட வேண்டும்.

**உசாத்துணைகள்:**


- ✓ அஸ்ஸால் ஏ.ஏ. (2000), “முஸ்லிம் சிறுபான்மையும் இஸ்லாமிய த.்.வாவும்”, இஸ்லாமிய சிந்தனை சஞ்சிகை, பேருவளை.
- ✓ இஸ்மாயில் எஸ்.எச்.எம். (2014), “த.்.வா பணியின் அவசியம்” (ஒன்லைன்) “ismailsalafi.com”
- ✓ இமாம், எம்.எப்.எம். (2013), “சமூக வலைத்தளங்கள் முஸ்லிம் இளைஞர்கள் மத்தியில் ஏற்படுத்திவரும் எதிர்மறையான தாக்கங்கள்: நிந்தவூர் பிரதேசத்தை மையப்படுத்தியதோர் ஆய்வு”, Paper presented at the Colloquium of Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka.
- ✓ கலாநிதி. முஹம்மத் அலீ, ஏ. (2009) “அழைப்புப்பணி அவசியமும் அணுகுமுறையும்”, புர்கான் பப்ளிகேஷன்ஸ் ட்ரஸ்ட், சென்னை.
- ✓ பிர்தௌஸி எஸ்.வை. (2014), “த.்.வாவின் முக்கியத்துவம்” (ஒன்லைன்) “jubaildawahtamil.blogspot.com”
- ✓ மௌலவி ஹாமித் லெப்பை மஹ்மூத் ஆலிம் (2008), “த.்.வா- அழைப்புப் பணியின் வரைவிலக்கணம். இணையம். www.islamkalvi.com/?p=599

✓ عبد الكريم زيدان (2001), أصول الدعوة , مؤسسة الرسالة, الطبعة التاسعة.

محمد عبد الرحمن الراوي (1965), الدعوة الإسلامية دعوة إسلامية, الدار القومية للطباعة والنشر.


[3] பாடசாலைகள், மத்ரஸாக்கள், பல்கலைக்கழகங்கள், கல்வியல் கல்லூரிகள் என்பனவும் உள்ளடங்கும்.